# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணிப் பரீட்சை, வருடம் III - 2017

### சர்வதேச மனிதாபிமானச் சட்டம்

(மூன்று மணித்தியாலங்கள்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடைதருக.
(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

1. "அண்மைய சில ஆண்டுகளுக்கு முன்னர், சர்வதேச மனிதாபிமானச் சட்டமானது பகிரங்க சர்வதேசச் சட்டத்தின் புதுமைபுனைவானதும் இன்றியமையாததுமானதொரு பரப்பாகவும் தென்பட்டிருந்ததாயினும், சமகால உலகத்திலுள்ள முரண்பாடுகளினது தன்மையில் ஏற்பட்டுள்ள சடுதியான மாற்றங்கள், தொழில்நுட்பரீதியான முன்னேற்றங்கள் அல்லது போரினாலான வருத்தத்தையும், பேரழிவு ஆயுதங்கள் இலகுவாகக் கிடைக்கின்றமையினையும் மட்டுப்படுத்தத் தேவையான சர்வதேச ஒத்துழைப்பினது கட்டமைப்புக்கள் என்பவற்றினது சிக்கல்களுக்கு முகங்கொடுக்க முடியாதளவுக்கு காலங்கடந்ததொன்றாக ஏற்கனவே மாறியுள்ளது."

   20ஆம் நூற்றாண்டில் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தில் ஏற்பட்ட வளர்ச்சி மற்றும் இக்கூற்றில் சுட்டிக்காட்டப்பட்டவாறு 21ஆம் நூற்றாண்டின் சவால்கள் என்பன தொடர்பில் விசேட கவனஞ்செலுத்தி, உமது விடையை விளக்குவதற்கு பொருத்தமான உதாரணங்களைத்தந்து மேலுள்ள கூற்றினை நுணுக்கமாக ஆராய்க.

2. பின்வரும் நிலைமைகளில் வகுப்பாக்கங்கள் என்னவாக இருக்குமென்று நீர் கருதுகின்றீர் என்பதனையும், அவை ஜெனீவாச் சமவாயங்கள் மற்றும் / அல்லது பின்னேடுகள் என்பவற்றின் நோக்கெல்லைப் பரப்பிற்குள் உள்ளடங்குமா இல்லையா என்பதனையும், நியாயபூர்வமான வாதங்களைத்தந்து ஆராய்க:

   அ. சஹாரியா என்பது, அஸுர் மற்றும் ஆக்கோர் ஆகிய சமூகங்களுக்கிடையில் இனரீதியான உள்ளூர் பதட்டங்களின் நீண்ட வரலாற்றைக் கொண்டதோர் அரசாகும். சஹாரியாவினது அரசாங்கமும் நிர்வாகமும் பெருந்தொகையான அஸுர் அதிகாரிகளினால் நிரப்பப்பட்டுள்ளன. இனரீதியான பாரபட்சங்காரணமான உள்ளூர் குழப்பத்தை அதிகரிக்கச் செய்கின்றதான வகையில் ஆக்கோர் மக்களினது அக்கறைகளைப் பாதுகாப்பதற்கென 2017ஆம் ஆண்டில் மேற்குப் பிராந்தியத்தில் 'ஆக்கோர் பீடம்' என்றழைக்கப்படுகின்ற ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டது. வன்முறை, சொத்துக்களைக் கொள்ளையிடல், தீயிடுதல் என்பவற்றில் ஈடுபடுகின்ற ஆயுதக்குழுக்களைக் காணக்கூடியதாக இருப்பதுடன், அவை சஹாரியாவினது மேற்குப் பிராந்தியத்தில் தொடங்கியதுடன், நாடு முழுவதும் பரவத்தொடங்கியது.

இவற்றுக்கு 'ஆக்கோர் பீரீடம்'தான் பொறுப்பேற்க வேண்டுமென்று தேசியமட்ட அதிகாரிகள் தெரிவிப்பதுடன், நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு மேற்குப் பிராந்தியத்துக்கு பீரங்கிப்படை வண்டிகள் மற்றும் ஹெலிக்கெப்டர்களுடன் சஹாரிய இராணுவத்தின் படைகள் அனுப்பி வைக்கப்படுகின்றன. சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் பிரயோகம் தொடர்பாக சர்வதேச சமூகம் அக்கறையினை வெளிப்படுத்தி வருகின்றதாயினும், இது ஒர் உள்நாட்டு விடயம் என்பதன் காரணமாக சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் பிரயோகத்தை அது தேவைப்படுத்தாது என்று சஹாரியா அரசு தெரிவிக்கின்றது.

ஆ. ஆயிரோலா மற்றும் தியான்லாந்து என்பன அயல் நாடுகளாகும். இரண்டு இனக் குழுக்களுக்கிடையில் உள்நாட்டு யுத்தமொன்று அண்மையில் தியான்லாந்துவில் வெடித்துள்ளது. குடியியல் யுத்தத்தில் அரசாங்கத்துக்கு வெளிப்படையாகவே உதவுவதற்காக தியான்லாந்துவுக்கு தனது படைகளை ஆயிரோலா அரசு அனுப்பியுள்ளதனை தியான்லாந்துவினது பிரசைகள் திடீரெனக் காணுகின்றனர். அவர்கள் எந்தத் தரப்புக்காக சண்டையிடினும், ஆயிரோலாவினது இராணுவம் பொதுமக்களுக்கு எதிரான தாக்குதல்களையும் தொடுத்துவருவது பெரும்பாலான தியான்லாந்து பிரசைகள் அதனை ஆயிரோலாவின் தலையீடு என்பதாகக் கண்டு ஆத்திரமடைகின்றனர்.

இ. தனது பொதுமக்களைக் குறிவைத்து மத்திய சந்தைத்தொகுதி மற்றும் புகையிரத நிலையம் என்பவற்றின் மீது வெடிகுண்டுத் தாக்குதல் நடாத்துவதற்கு தாசின் என்ற அரசானது முன்கூட்டியே ஆயுதக்குழுக்களை சிந்தான் என்ற அரசுக்குள் அனுப்பியிருந்தது என்று தெரிவித்து, சிந்தான் என்ற அரசானது தாசின் என்ற அரசின் மீது படையெடுப்புச் செய்துள்ளது. தாசின் நாட்டுப் பிரசைகள் தாங்களாகவே ஆயுதந் தாங்கியிருப்பதுடன் தற்கொலைத் தாக்குதல் உட்பட எல்லா வகையான ஆயுதங்களையும் பாவித்து, படையெடுப்புச்செய்துள்ள இராணுவத்துடன் சண்டையிடுவதில் தமது அரசாங்கத்துக்கு உதவி புரிகின்றனர். சட்டமுரணான உபாயவழிகளைப் பாவிக்கின்றமையினால் அவர்கள் பயங்கரவாதிகளாவர் என்பதனால், ஜெனீவாச் சமவாயங்கள் மற்றும் பின்னேடுகள் என்பன தம்மைத்தாக்கும் தாசின் நாட்டின் எந்தவொரு பிரசைக்கும் பாதுகாப்பளிக்க மாட்டாது என்ற கூற்றினை சிந்தான் நாட்டு இராணுவத் தளபதி 'தீ' என்பவன் செய்கின்றான்.

3. "சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தில் குறித்தசில ஆயுதங்களின் மீதான தடை அல்லது ஆயுதங்களின் பாவனை அல்லது உற்பத்தி மீதான கட்டுப்பாடு என்பன மனிதனுக்கு அவசியமற்ற வருத்தமேற்படுவதனைத் தடுப்பதில் மாத்திரமே அக்கறைகொண்டுள்ளது. இயற்கைச் சுற்றாடல் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தில் முக்கியத்துவம் பெறுவது மனித இனஞ்சார்பினாலேயே அன்றி, அதனது சொந்தப் பாதுகாப்புக்காக அல்ல. இயற்கைச் சுற்றாடலின் பாதுகாப்பானது சுற்றாடல் சட்டத்தினால் நேரடியாகப் பாதுகாக்கப்பட்டிருப்பதுடன், சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் குறிக்கோள் ஒன்றல்ல."

பல்வேறு வகைப்பட்ட ஆயுதங்கள் தொடர்பில் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கீழான சட்ட மட்டுப்பாடுகளின் பின்னணியில் மேலுள்ள கூற்றினை நுணுக்கமாக மதிப்பீடு செய்க.

4. 'யாணா' என்ற சமயத்தின் கோயில்களை நிறையக் கொண்டுள்ளதும், ஆயிரக்கணக்கான புனித கையெழுத்துச் சுவடிகளைக் கொண்டுள்ள ஆயிரம் வருடங்களுக்கு மேலான பழைமையான பிரபல்யமிகு நூலகம் ஒன்றையும் கொண்டுள்ள, 'டாவு' என்றழைக்கப்படுகின்ற புராதன புனித நகரமொன்றைக் ஸாலி என்ற அரசானது கொண்டுள்ளது. டாவு தொடர்பாக ஸாலி அரசானது மிகுந்த பெருமைகொள்வதுடன், அந்த நகரத்தின் பெறுமதியை அங்கீகரிக்கவும் பாதுகாப்பதற்கும் பொருத்தமான சர்வதேச சட்ட நடவடிக்கைகளை அவர்கள் எடுத்துள்ளனர். ஹில்லிலாந்து என்ற அயல் நாட்டுடனான ஆயுதமோதலின் போது, டாவு நகரமானது ஹில்லிலாந்துவினால் ஆக்கிரமிக்கப்படுகின்றது. ஹில்லிலாந்துவினது அதிகாரியொருவரான திரு. இலோடி என்பவன் டாவு நகரத்தை நிருவகிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளான். யாணா சமயமானது அப்பிராந்தியத்தில் தவறான சிந்தனையை பரப்புவதாகவும் அது நிறுத்தப்படுதலும் வேண்டுமென ஹில்லிலாந்துவினது பிரதான மதகுரு தெரிவிக்கின்றார். பின்னர், ஸாலி நாட்டினது ஆயுதப் படையினர் அந்த ஆள்புலத்தை ஹில்லிலாந்திடமிருந்து வெற்றிகொண்டு மீளப்பெறுவதுடன், திரு. இலோடி மற்றும் ஹில்லிலாந்துவினது படையினர் சிலரையும் கைதுசெய்கின்றனர். அங்கிருந்த கோயில்களுக்கும் நூலகத்துக்கும் ஆக்கிரமிப்புச் செய்திருந்தவர்களால் கடுமையான சேதம் இழைக்கப்பட்டிருந்ததனை பின்னர் காணக்கூடியதாகவுள்ளது.

ஹில்லிலாந்துவினது இராணுவத்தினரே உண்மையில் அத்தகைய செயற்பாடுகளைச் செய்திருந்தார்களாயினும், அச்சேதங்களுக்கு திரு. இலோடிதான் மிகவும் பொறுப்புடைமை கொண்டவர் என்று டாவு நகரத்தின் உள்ளூர் மக்கள் தெரிவிக்கின்றனர். புனிதமான அக்கையெழுத்துச் சுவடிகள் சிலவற்றை திரு. இலோடி தனக்குச் தனிப்பட்ட வகையில் எடுத்துக்கொண்டதுடன், ஹில்லிலாந்துக்கான ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கான நிதியைச் சேகரித்துக் கொள்வதற்காக வெளிநாட்டு வழங்குனர்களுக்கும் விற்பனை செய்துள்ளான் என்று அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். தான் உள்ளூர் மக்களை காயப்படுத்தவோ அல்லது கொலைசெய்யவோ இல்லையென்றும், தான் பொதுமக்களில் ஒருவன் எனவும், படையினருக்கு எத்தகைய கட்டளையினையும் தான் வழங்கவில்லையெனவும், அக்குறிப்பிட்ட நேரத்தில் ஹில்லிலாந்துவுக்குச் சொந்தமான ஆதனத்தையே அவன் விற்பனை செய்திருந்ததாகவும், ஆகையால் எக்குற்றத்தையும் தான் புரியவில்லையெனவும் திரு. இலோடி அவனது பதிலில் தெரிவிக்கின்றான்.

புனித நகரத்துக்குச் செய்யப்பட்ட சேதங்களுக்கு சர்வதேச சட்டத்தின் கீழ் திரு. இலோடியினை தண்டிப்பதற்கு ஸாலியின் அரசாங்கமானது விரும்புகின்றது. அவசியமானவை எவையே அத்தகைய பொருந்தமான வழக்குச் சட்டத்தையும் பொருத்தனைச் சட்ட ஏற்பாடுகளையும் சுட்டிக்காட்டி பொருத்தமான சட்டப்பிரச்சனை தொடர்பாக ஸாலியிற்கு ஆலோசனை கூறுக.

5. ஓரோஸ் மற்றும் நூலா என்பன பொதுவான எல்லைப்புறத்தைக் கொண்டுள்ள இரண்டு நாடுகளாகும். 2016ஆம் ஆண்டு, நூலாவினுடைய ஆயுதக்கஞ்சியமொன்றை அடையாளங்கண்டு அதற்கெதிரான வான் தாக்குதலையும் தொடுத்தது. அதன்பின்னர், புலனாய்வு அறிக்கை தவறானதென்றும் உண்மையில் தாக்குதலுக்குள்ளாயிருந்தது புத்தகக் களஞ்சியமாகும் என்பது தெரியவந்தது. பழிதீர்க்கும் திருப்பித்தாக்குதலில், ஓரோஸினுடைய மத்திய மின்சார வழங்கல் சபைக்கு எதிரான தாக்குதலை நூலா தொடுத்தது. மத்திய மின்சார வழங்கல் சபையினது மின்சார வழங்கலை ஓரோஸினது ஆயுதப்படைகள் பயன்படுத்துவதாகத் தெரிவித்து தனது தாக்குதலை நியாயப்படுத்தியது. ஆயினும், தாக்குதலுக்கு மறுநாள், மின்சார துண்டிப்புக் காரணமாக பொதுமக்களினது நாளாந்த வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக, ஓரோஸினது செய்திப்பத்திரிகைகள் தெரிவித்தன.

2017ஆம் ஆண்டு ஜுலையில், நூலா இராணுவத்தின் பிரதம கட்டளையதிகாரியான பீட்டர் என்பவனின் இறப்பையேற்படுத்த வேண்டுமென எதிர்பார்த்து ஓரோஸ் தாக்குதலொன்றைத் தொடுத்தது. ‘ஹோட்டல் ஹோப்’ என்பதில், கம்பனியொன்றின் வருடாந்த விருந்துபசார நிகழ்வொன்று நடைபெற்றுக் கொண்டிருந்த அதேநேரத்தில், பீட்டரும் இராணுவ மாநாடொன்றில் அங்கு கலந்துகொண்டிருந்தபோது அத்தாக்குதல் பீட்டர் மீது மேற்கொள்ளப்பட்டது. குறித்த தாக்குதலில் சிறிய காயங்களுடன் பீட்டர் தப்பியிருப்பினும், நூலாவினுடைய சிரேஷ்ட இராணுவக் கட்டளையதிகாரிகள் ஐந்து பேரும் பொதுமக்கள் முப்பது பேரும் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலை இராணுவ அனுகூலம் என்பதாக நியாயப்படுத்தி உத்தியோகபூர்வ கூற்றொன்றையும் ஓரோஸ் வெளியிட்டுள்ளது.

ஜெனீவாச் சமவாயங்கள் மற்றும் மேலதிகப் பின்னேடுகள் என்பவற்றுக்கு இரண்டு அரசுகளும் தரப்பினர் என்று கருதிக்கொண்டு, தரப்பட்ட நிகழ்வுகளின் சட்ட விளைவுகளைப் பகுப்பாய்வு செய்க. உமது விடையானது அதிகார ஆதாரங்களினால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

6. ரொபிக்கா என்ற அரசானது கடந்த சில வருடங்களாக நடைபெற்றுவருகின்ற ஆயுத மோதலொன்றின் காரணமாக அழிபாடுகளுக்குட்பட்டுள்ளது. அல்போஸ் என்கின்ற பெரும்பான்மை சமூகத்துக்கும் பிஸ்கோஸ் என்கின்ற சிறுபான்மை சமூகத்துக்கும் இடையிலான அதிகாரப் போராட்டமானது, பிஸ்கோஸுக்கான தனியான அரசொன்றைத் தாபித்துக் கொள்ளுகின்ற எண்ணத்துடன் ரொபிக்காவினது இராணுவத்துக்கு எதிரான ஆயுதத் தாக்குதலுக்கு பிற்காலத்தில் இட்டுச்சென்றுள்ளது.

2015ஆம் ஆண்டில், “பிஸ்கோ போர்ஸ்” என்ற அமைப்பின் தலைவனாக றோப் என்பவனை பிஸ்கோஸ் நியமித்தது. அந்த அமைப்புக்கு சீருடையினையும் முன்னேற்றகரமான பல ஆயுதங்களையும் வெற்றிகரமாக றொப் அறிமுகஞ்செய்ததுடன், “பிஸ்கோ போர்ஸ்” அமைப்பின் பல்வேறு விடயங்களுக்குப் பொறுப்பாக ஐந்து பிரதித் தலைவர்களையும் நியமித்தான். “பிஸ்கோ போர்ஸ்” அமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட பிரச்சார இயக்கத்தின் வெற்றி காரணமாக, ரொபிக்காவினது படைகளுக்கு எதிராக, “பிஸ்கோ போர்ஸ்” அமைப்புடன்

இணைந்து சண்டையிடுவதற்கு இளம் ஆண்களும் பெண்களுமான படையொன்றை அவர்களால் திரட்டிக்கொள்ள முடிந்தது. மூன்று மாதங்களுக்கு முன்னர், இந்த ஆட்களில் சிலர் தமது பண்ணையில் வேலைசெய்துகொண்டிருக்கும் போது ரொபிக்காவினது இராணுவம் அவர்களைத் தாக்கியது. அவர்களில் பத்துப்பேரைக் கைதுசெய்ததுடன், "பிஸ்கோ போர்ஸ்" அமைப்பின் உறுப்பினர்களை ஒரு வருடத்திற்கும் அதிகமான காலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள விசேட தடுப்பிடம் ஒன்றில் இவர்களையும் தடுத்துவைத்தது. இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டுள்ள ஆட்களோ அல்லது "பிஸ்கோ போர்ஸ்" தடுப்புக்கைதிகளோ தமது குடும்பத்தினருடன், வழக்கறிஞர்களுடன் அல்லது சர்வதேசச் செஞ்சிலுவைக்குழு அதிகாரிகளுடன் தொடர்புகொள்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டுள்ள சில தனிநபர்கள் உடல்ரீதியான கடுமையான வேலைகளில் ஈடுபடுவதற்கு கட்டாயப்படுத்தப பட்டுள்ளனர் என்பதாக "இன்டர்நஷனல் ரைட்ஸ் வாட்ச்" என்ற அமைப்பு தெரிவிக்கின்றது.

ரொபிக்கா அரசானது நான்கு ஜெனீவாச் சமவாயங்களுக்கும் அவற்றினது மேலதிகப் பின்னேடுகளுக்கும் அரச தரப்பொன்றாகும். விபரிக்கப்பட்ட சம்பவங்களின் சட்டப் பகுப்பாய்வை வழங்குமாறு வேண்டப்பட்டுள்ள ரொபிக்கா பல்கலைக்கழகத்தின் சட்ட ஆய்வாளரொருவர் நீர் என்று கருதிக்கொண்டு, பொருத்தமான சட்ட ஏற்பாடுகள் மற்றும் வழக்குகள் என்பவற்றைச் சுட்டிக்காட்டி அறிக்கையொன்றை எழுதுக.

7. சௌம்யா மற்றும் ரம்யா ஆகிய இரண்டு அயல் நாடுகளினதும் எல்லை தொடர்பான பிணக்குகள், ரம்யாவினது அதி தொழில்நுட்ப ஆயுதப் பரிசோதனை ஆய்வுகூடத்தின் கதிரியக்கக் கழிவுகளானவை சௌம்யாவினது ஆள்புலத்திற்குள் சென்றமை காரணமாக, முழுமையானதொரு ஆயுத மோதலாக மாறியது. சண்டையிலீடுபடுகின்ற தரப்பினரின் வன்முறைச் செயல்களானவை பின்வருவனவற்றையும் உள்ளடக்கும்:
   அ) சௌம்யாவினது தேசிய அரும்பொருளொன்றாகக் கருதப்பட்ட தாவரவியற் பூங்காவை முற்றாக அழிப்பதற்காக நச்சு மற்றும் இரசாயன ஆயுதங்களை ரம்யாவினது படைகள் பாவிக்கின்றன.
   ஆ) பழிநீக்கும் திருப்பித்தாக்குதலில், சௌம்யாவினது லீபோ என்ற சனநெரிசலான கிராமமொன்றில் அமைந்துள்ள அதிதொழில்நுட்ப ஆய்வு கூடங்களை இலக்குவைப்பதற்கு ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தி, அத்தளத்திலுள்ள பொதுமக்கள்சார் பணியாளர்கள் கடுமையான எறிகணைகளால் கொல்லப்படுகின்றனர்.
   இ) பிடிபட்டால் தற்கொலைத் தாக்குதலை மேற்கொள்ளுமாறு அல்லது பிடிபடுவதன்மேல் மனிதாபிமான பணியாளர்கள் போன்று பாசாங்குபண்ணுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு, பயிற்றுவிக்கப்பட்டதொரு குழுவை ரம்யாவினது புலனாய்வானது தாக்குதல் தொடுப்பதற்காக அனுப்பிவைக்கின்றது.

சௌம்யா மற்றும் ரம்யா ஆகிய இரண்டு அரசுகளும் 1949ஆம் ஆண்டின் ஜெனீவாச் சமவாயங்கள் மற்றும் 1977ஆம் ஆண்டின் முதலாவது மேலதிகப் பின்னேடு என்பவற்றுக்கு அரசுத்தரப்பொன்றாகும் என்று கருதிக்கொண்டு, தரப்பினரின் உரிமைகள் மற்றும் பொறுப்புடைமைகள் என்பவற்றை ஆராய்க.

************************